## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 63/2020 | Date : 25.04.2023 | PW1 |
|---|---|---|
| Name: அன்சர் | S/o. ஹாஜிசோட்டாசாயபு | |
| Evidence Recorded Time: 12.21 P.M. to 1.45 P.M | | |

**1, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எனக்கு தற்போது 68 வயதாகிறது. நானும், 2, 3 பிரதிவாதிகளும் இஸ்லாம் மதத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 1, 4 பிரதிவாதிகள் இந்து மதத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இஸ்லாம் மதத்தில் நான் எந்த பிரிவை சேர்ந்தவர்கள் என்றால் சன்னி பிரிவை சேர்ந்தவர்கள். இஸ்லாத்தில் ஷரியத் சட்டத்தை பின்பற்றி வருகிறோம். நான் பி.யூ.சி வரை படித்துள்ளேன். நான் 1981ம் ஆண்டு முதல் 2014-ம் ஆண்டு வரையில் நீதிமன்ற பணியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளேன். 1-ம் பிரதிவாதி வாங்கிய சொத்தில் வாங்கும் முன்னுரிமை கோரிதான் இஸ்லாம் சட்டம் பாகம் 16 ன் படிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பாகம் 16 விதிமுறைகளில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளதோ கிரைய பணம் ரூபாய் எட்டு லட்சத்து அறுபத்தைந்தாயிரத்தை 1ம் பிரதிவாதியிடம் செலுத்தி கிரையம் வாங்கி கொள்வதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். தாவாவில் என்ன காரணத்திற்காக என்ன தகுதியின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் மூன்று காரணங்களின் அடிப்படையில் எனக்கு அது பொருந்தும் என்ற தகுதியில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அப்படி எந்த ஒரு மூன்று காரணத்தையும் தாவாவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து பொதுபாத்தியத்தில் உரிமை உள்ளதால் தாவா சொத்து பொது பாத்தியத்தின் அடிப்பைடையில் 1, 4 பிரதிவாதிகள் தான் கூட்டாக அனுபவிப்பதில் வேறுபாடு ஏற்படும் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, பதிலுரையில் பொது பாத்தியத்திலும், அருகாமை நிலத்துகாரர்கள் என்பது உண்மை என்று பதிலில் கூறியுள்ளார்கள். 2010-ம் ஆண்டு எனக்கும், இதர குடும்ப உறுப்பினர்களுக்கும் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள பொதுஷராவில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களில்தான் பொது பாத்தியம் உள்ளது என்றாலும், தாவா சொத்தில் தனிப்பட்ட முறையில் எந்த பொது

பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல, A, B, C அயிட்ட சொத்துக்களில் உத்தி, வாரி, வாய்க்கால், பைப்லைன் ஆகியவை பொதுவாக உள்ளதாக சாட்சி கூறுகிறார். தாவாவில் 2, 3 பிரதிவாதிகள் மீது தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் மற்றொரு சகோதரி ஷகிலா மீது எந்த பரிகாரமும் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அவரை தரப்பினராக சேர்க்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அத்தியவாசிய தரப்பினரை பிரதிவாதியாக கட்சி சேர்க்காத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரத்திற்கு ஆதரவாக நீதிமன்றத்தில் ரூபாய் எட்டு லட்சத்து அறுபத்தைந்தாயிரத்தை இன்றுவரை வைப்பீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய தயாராக உள்ளதாக கூறி நீதிமன்றத்தில் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை. இஸ்லாம் சட்டத்தில் சொன்ன வழிமுறைகளின் அடிப்படையில் மேற்படி தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யாத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் தாவா வழக்குரையை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். ஆவண எண்.700/2010 ன் படி சி செட்யூல் சொத்தில் எனக்கு பாகம் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி சி செட்டியூல் சொத்து 2, 3 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு பாகம் பிரித்த சொத்துகளில்தான் நான், எனது அம்மா, எனது சகோதரிகள் ஆகிய அனைவரும் ஆவண எண்.700/2010 ன் படி பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் எனக்கு ஏ செட்யூல் சொத்து என் அம்மாவிற்கும், எனக்கு பி செட்யூல் சொத்தும் ஒதுக்கப்பட்டது. பி செட்டியூல் சொத்தில் எனக்கு மொத்தம் 11 ஏக்கர் 18 செண்ட் நிலம் பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் சம்மந்தப்பட் சி செட்யூல் சொத்தான ஐந்து ஏக்கர் எனது சகோதரிகளுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் அம்மாவிற்கு இரண்டு ஏக்கர் நிலம் ஏ செட்டியூல் படி ஒதுக்கப்பட்டது. எனது அப்பாவின் சொத்தில் அதிகபட்சமாக 11 ஏக்கர் 18 செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல, என் தந்தை உயிருடன் இருக்கும் போதே பிரித்து கொடுத்துவிட்டார். என் அப்பா 13.08.2002-ம் தேதியில் இறந்துவிட்டார். அவர் இருக்கும் போது எனக்கு பாகம் பிரித்து கொடுக்கவில்லை என்றாலும் அவர் இறந்தபின்புதான் பாகம் பிரிக்கப்பட்டது என்றாலும்

சரியல்ல. அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு என்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் செட்டில்மெண்ட் உயில் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள செட்டில்மெண்ட் உயில் ஆவணத்தில் என் அப்பா விருப்பப்படி தான் பிரித்துக்கொண்டதாகா குறிப்பிட்டு காணப்படவில்லை என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை ஆவண எண்.700/2010 08.04.2010–ம் தேதிய ஆவணத்தை படித்து பார்த்து, புரிந்து கொண்டு சரியென ஒப்புக்கொண்டு சாட்சிகள் முன்னிலையில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதானன். அதில் எனக்கு எந்த மாற்று கருத்தும் இல்லை என்றால் சரிதான். நாங்கள் எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் 7ம் பக்கத்தில் இனிமேற்கொண்டு நம்மில் யாரும் கீழ்கொண்ட சொத்துக்களை கீழ்கண்ட சொத்துக்களை குறித்தோ, இந்த பாகப்பிரிவினை பத்திரத்தை குறித்தோ ஆட்சேபித்து எந்த காலத்திலும் எந்த சந்தரப்ப சூழ்நிலையிலும் எக்காரணம் கொண்டும் பிரிவினைக்கு மாறாக எவ்விர உரிமையும், பாத்தியமும், உரிமையும் கோரி வழக்கு தொடர உரிமை இல்லை என்றும் அவ்விதம் நம்மில் யாராவது உரிமை கொண்டாடினாலும் அது செல்லத்தக்கது அல்ல என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சங்கதிகளை நான் ஒப்புக்கொண்டுதான் மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் கையெழுத்து செய்துள்ளேன் என்றாலும் சரிதான். பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் என்னுடைய உரிமை எதுவும் இல்லை என்று ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்துவிட்டு தற்போது அதில் வாங்கும் முன்னுரிமை கோரியிருப்பது முரண்தடை கோட்பாட்டின் அடிப்படையில் செல்லாது என்றாலும் இதன் அடிப்படையில் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. எனது சகோதரிகளுக்கு ஒதுக்கப்பட்ட சி செட்டியூல் சொத்துக்களில் நான் கூட்டுரிமைதாரர் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய மூன்று சகோதரிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை தான் 1ம் பிரதிவாதி விலை கொடுத்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி ஆவணங்களை பரிசோதனை செய்தம், வில்லங்கம் பார்த்தும் எனக்கு தெரிந்துதான் ரூபாய் எட்டு லட்சத்து அறுபத்தைந்தாயிரத்தை கொடுத்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல, எனக்கு கிரையம் பெற்ற விவரம் தெரியாது. அசல் வழக்கு எண்.18/2019 வழக்கை 06.11.2019–ம் தேதியில் திரும்ப பெறும்

போதுதான் மேற்படி விவரங்கள் எனக்கு தெரியும், அதற்கு முன்பாக தெரியாது. என்னுடைய மற்றொரு சகோதரி ஷகிலாவின் சொத்துக்களையும் சேர்த்து தான் 1ம் பிரதிவாதி கிரையம் பெற விலை பேசினார் என்றாலும் என்னுடைய தூண்டுதலின் பேரில்தான் ஷகிலா 1ம் பிரதிவாதிக்கு அவருடைய பாகத்தை விலைக்கு கொடுப்பத்திலிருந்து பின்வாங்கி கொண்டார் என்றாலும் அதனால் 2, 3 பிரதிவாதிகளிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றார் என்றாலும் சரியல்ல. 1, 4 பிரதிவாதிகள் கிரையம் பெறுவதற்கு முன்பு நான் தாவா சொத்துக்களை 2, 3 பிரதிவாதிகளிடம் விலைக்கு கேட்டேனா என்றால் கேட்கவில்லை. எனக்கு தெரிந்துதான் என்னிடம் சொல்லிவிட்டுதான் 2, 3 பிரதிவாதிகள் 1, 4 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துக்களை 15.05.2019 ல் கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருப்பதால் தாவா சொத்துக்களை விற்கமாட்டார்கள் என்று எண்ணியிருந்தேன். கிரைய சொத்திற்கு மேற்கே 1, 4 பிரதிவாதிகளுக்கு சொந்தமான கல்குவாரி இருப்பதாக சொல்லியுள்ளேன், 1, 4 பிரதிவாதிகளும் தாவா சொத்தின் பக்கத்து நிலத்துக்காரர்கள்தான். 1, 4 பிரதிவாதிகளுக்கும் எனக்கும் கல்குவாரியில் வெடி வைக்கும்போது எனது பூமியில் கல் விழுவது சம்மந்தமாக பிரச்சனை இருப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பிரச்சனை சம்மந்தமாக நான் காவல் துறையில் புகார் கொடுத்தது மற்றும் நடவடிக்கை எடுத்தற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கும், 1, 4 பிரதிவாதிகளுக்கும் இடையில் எந்த விதமான பிரச்சனைகள் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. ஆவண எண்.700/2010 கண்டுள்ள சொத்துக்களை பொதுஷராவில் கண்டபடி இன்று வரை நானும், 1, 4 பிரதிவாதிகளும் அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. அதை பொறுத்து அசல் வழக்கு எண்.71/2019 வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. 10.08.2020–ம் தேதியில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேனா என்றால் 10.03.2020–ம் தேதி தாக்கல் செய்தேன். வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தற்போது வரை 1, 4 பிரதிவாதிகள் பொதுஷராவில் குறிப்பிட்ட உத்தி, வாரி, வாய்கால் வழிதடத்தில் எந்த விதமான இடையூறும் செய்யவில்லை என்று எந்தவிதமான புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 1, 4 பிரதிவாதிகள் இன்றுவரை சுவாதீனம் எடுத்துக்கொள்ளவில்லை. 1, 4

பிரதிவாதிகளிடம் தான் இன்றுவரை சுவாதீனம் உள்ளது என்றால் சரியல்ல. 22.06.2018—ம் தேதியில் என் அம்மா இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் அம்மா எழுதிவைத்த பத்திரத்தை பொறுத்து, அது மோசடி, செல்லாது என்றும் என் அம்மா சொத்தில் ஐந்து பாகமாக பிரிக்க அசல் வழக்கு எண்.71/2019 என்ற வழக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு இன்றுவரை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களில் கிரையம் செய்து கொடுத்தது தொடர்பாக அசல் வழக்கு எண்.18/2019 வழக்கில் 06.11.2019—ம் தேதியில் குறிப்பாணை தாக்கல் செய்தபோதுதான் எனக்கு மேற்படி சங்கதிகள் தெரிவந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகளிடம் தற்போதும் பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் உள்ளது. 15.11.2019—ம் தேதியில் 9 நாட்கள் கழித்துதான் வில்லங்சான்று (வா.சா.ஆ.6) போட்டுபார்த்து நடவடிக்கை எடுத்தேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ஆவணத்தில் 15.11.2019 தேதிதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆவணத்தை பின்னால் தாக்கல் செய்துள்ளேன். 16.12.2019—ம் தேதியில் 1, 2 3 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு(வா.சா.ஆ.8) அனுப்பி அதில் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்கவேண்டும் என்று கூறியுள்ளேன் சரிதான். 06.11.2019—ம் தேதியிலிருந்து 40 நாட்கள் கழித்துதான் நான் தாவா சொத்தை வாங்கும் முன்னுரிமை கோரியது இஸ்லாம் சட்டப்படி காலாவதியாகிவிட்டது என்றால் சரியல்ல. 1, 4 பிரதிவாதிகள் 20.01.2020—ம் தேதியில் வழக்கறிஞர் பதில் அறிவிப்பு (வா.சா.ஆ—9) கொடுத்தார்கள் என்றாலும் 2, 3 பிரதிவாதிகள் 21.01.2020—ம் தேதியில் வழக்கறிஞர் பதில் அறிவிப்பு (வா.சா.ஆ—10) கொடுத்தார்கள் என்றாலும் சரிதான். அதன் மூலம் தக்க விளக்கம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பதில் அறிவிப்புகளில் என்ன விளக்கம் கொடுக்கப்பட்டது என்று படித்து பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகள் கொடுத்த பதில் அறிவிப்புகளில் உள்ள சங்கதிகள் பொய் என்று ரீஜாய்ண்டர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தை 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற தேதியிலிருந்து நான் வாங்கும் முன்னுரிமை கோரி தாக்கல் செய்த தாவா ஆனது 126 நாட்கள் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்ய ஒரு வருடம் கால அவகாசம் உள்ளது.

கிரயம் பெற்ற விவரம் தெரிந்த உடனேயே 06.11.2019–ம் தேதியன்றே இஸ்லாம் சட்டம் வரையறுத்துள்ளபடி வாங்கும் முன்னுரிமைக்கு சரியான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதால் தாவா சொத்துக்களில் கிரயம் வாங்க எனக்க எந்த விருப்பமும் இல்லை என்றால் சரியல்ல. அதன் அடிப்படையிலும் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. கியைத்திற்கு பின்னிட்டு 1 முதல் 4 பிரதிவாதிகளிடம் பேச்சு வார்த்தை இல்லை என்றால் 2, 3, 4 பிரதிவாதிகளிடம் பேச்சுவார்த்தை உள்ளது, 1ம் பிரதிவாதியிடம் பேச்சுவார்த்தை இல்லை. தாவா சொத்தில் நான் கூட்டுபங்குரிமைதாரர் இல்லை என்பதால் அண்டை நிலத்துக்காரர் என்ற தகுதியில் எனக்கு வாங்கும் முன்னுரிமை இல்லை என்பதால் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. கிரைய தொகையையோ, மூன்றில் ஒரு பங்கு தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. இஸ்லாம் சட்டப்படி வாங்கும் முன்னுரிமைப்படி உள்ள சட்டம் ஷபா என்றால் அதுபற்றி தெரியாது. ஷபா வரையறுத்துள்ள வாங்கும் முன்னுரிமை கோருபவர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை நான் பின்பற்றாத காரணத்தினால் எனக்கு வழக்கு மூலம் எழவில்லை என்றாலும் சரியல்ல. இஸ்லாம் சட்டப்படி வாங்கும் முன்னுரிமை கோருபவரும், விற்பவரும் முஸ்லீம் ஆக இருந்து கிரையம் வாங்கிய 1ம் பிரதிவாதி இந்துவாக இருந்தால் வாங்கும் முன்னுரிமை கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு பாகம் பிரிந்த சொத்துக்களில் 1, 4 பிரதிவாதிகள் வாய்மொழி ஒப்பந்தம் மூலம் குத்தகைக்கு நிலத்தை ஓட்டி வந்து என் அப்பாவிடம் குத்தகை பணத்தை செலுத்தி வந்தார்கள் என்றாலும் என் அப்பா இறப்பிற்கு பிறகு என் அம்மாவிடம் குத்தகை பணத்தை செலுத்தி வந்தார்கள் என்றாலும் சரியல்ல. 2010–ம் ஆண்டு பாகம் பிரித்த பிறகு சி அயிட்ட சொத்துக்களை 1, 4 பிரதிவாதிகள்தான் ஓட்டிவந்தார்கள் என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகள் பாகப்பிரிவினை பெற்ற பின்பும் 1, 4 பிரதிவாதிகள்தான் குத்தைக்கு ஓட்டிவந்தார்கள் என்றால் சரியல்ல. எனது குடும்ப சொத்துக்கள் குறித்த வழக்குகளில் அசல் வழக்கு எண்.18/2019, 71/2019 வழக்குகளில் 1, 4 பிரதிவாதிகள் தரப்பினராக இல்லை என்றால் சரிதான். குடும்ப சொத்துக்கள் சம்மந்தப்பட்ட மேற்படி இரண்டு வழக்குகள் பற்றி 1, 4 பிரதிவாதிகளுக்கு

தெரியாது என்றாலும், அதைபற்றி 2, 3 பிரதிவாதிகள் 1, 4 பிரதிவாதிகளிடம் கூறவில்லை என்றாலும் சரியல்ல. 2019 பிப்ரவரி மாதம் 1, 4 பிரதிவாதிகளுக்கு தெரியும். வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை 1, 4 பிரதிவாதிகள் நல்லெண்ண அடிப்படையில் கிரையம் பெற்றவர்கள் என்றால் சரியல்ல. இஸ்லாம் சட்டம் இஸ்லாமியர்களுக்கு மட்டுமே செல்லும் என்றாலும் மாற்ற மதத்தினருக்கு செல்லாது என்றாலும் சரியல்ல. எனது அம்மாவின் பாக சொத்துக்களை 2, 3 பிரதிவாதிகளுக்கும், ஷகிலாவிற்கும் உயில் சாசனம் எழுதி வைத்ததால் அதில் எனக்கு உரிமை இல்லை என்பதை தெரிந்து கொண்டு உயில் சாசனத்தில் உள்ள சொத்துக்களில் பாகம் பெற வேண்டும் என்ற கெட்டஎண்ணத்தில் அச்சுறுத்தி பணியவைத்து 1, 4 பிரதிவாதிகளை வேண்டுமென்றே தாவா சொத்துக்களை வாங்க முன்னுரிமை உள்ளது என்று இல்லாத காரணங்களை கூறி சட்டவிரோதமான முறையில் ஆதாயம் அடையவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்கள் குடும்ப பிரச்சனையில் 1, 4 பிரதிவாதிகளை அனவசியமாக தொந்தரவு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையாக நேர்மாக சுத்தமான கரங்களோடு நீதிமன்றத்தை அணுகாத காரணத்தினால் என்னுடைய வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தாவாவில் எந்த பரிகாரமும் கோர எந்த விதமான அனுகூலமும் இல்லாத காரணத்தினால் தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவாவில் கோரிய எந்த பரிகாரமும் கிடைக்ககூடியது அல்ல என்பதால் தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் விலைக்கு கொடுக்குமாறு 2, 3 பிரதிவாதிகளிடம் கேட்டதாக தாவாவில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் தாவா சொத்தை வாங்கி கொள்ள தயாராக எந்த சந்தர்ப்பத்திலும் இல்லை என்பதால் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. யாரிடம் சாட்சிகளை வைத்து கொண்டு யார் மூலமாக கிரையம் கேட்டேன் என்ற விவரத்தை தாவா சொல்லவில்லை என்றால் சரிதான். பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. இந்திய அரசியலமைப்பு சட்டப்படி ஒருவருடைய சட்டத்தை சொத்தை யார்

வேண்டுமானலும் வாங்க உரிமை உள்ளது என்பதால் எங்களுடைய இஸ்லாமிய சட்டம் அதை கட்டுப்படுத்த முடியாது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.